IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

STC No.2682/2025

Deposition of Witness PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : குமார் | Father Name : | |
| Village | : | Calling | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.02.2026

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது ஈரோடு சூரம்பட்டி நால் ரோட்டில் வசித்து வந்து ஆட்டோ ஓட்டும் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளில் எதிரி ஜோன்ஸ் என்பவரை எனக்கு தெரியும். 18.08.2025 என்று மாலை 4–4.20 மணிக்கு கலைமகள் பள்ளி அருகில் குழந்தைகளை ஆட்டோவில் ஏற்றுக் கொண்டிருந்த போது, ஆஜர் எதிரி ஜோன்ஸ் மற்றும் அடையாளம் தெரியாத 4நபர்கள் வந்தனர். அதில் ஜோன்ஸ் என்பவர் தனது கையால் எனது முகத்தில் குத்தினார். மீதமுள்ள மூன்று நபர்களில் ஒருவர் எனது வலதுபுற அல்லையில் அடித்ததில் எனக்கு மூச்சு விட முடியாமல் ஏற்பட்டது. அப்போது பின்னால் இருந்து ஒரு நபர் கத்தியால் குத்தினார். நான் உடனே பள்ளிக்கூடத்திற்கு சென்று விட்டேன். அவ்வாறு நான் தப்பிச் செல்லவில்லை என்றால் அன்று செத்திருப்பேன். அதன் பிறகு நானே எனக்கு கொஞ்சம் சரியான பிறகு அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்கு சேர்ந்தேன். அதன்பிறகு எனது மனைவிக்கு போன் மூலம்

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.02.09 16:23:03 +0530

தகவல் சொன்னேன். நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது ஒரு சில வார்த்தைகள் மட்டுமே பேசினேன். அங்கு போலீசார் மருத்துவமனையில் விசாரித்த போது நான் நடந்து விவரத்தை சொன்னேன். போலீசார் எழுதியதை நான் படித்துப் பார்த்தபோது அதில் கத்தியால் குத்தியது எழுதப்படவில்லை. அது குறித்து கேட்டபோது போலீசார் பின்னிட்டு அதை சேர்த்துக் கொள்வதாக கூறினார்கள்.

**சாட்சி முதல் விசாரணையில் சொல்லியுள்ள மற்ற மூன்று எதிரிகள் குறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்காக அரசு தரப்பில் கேட்டுக் கொண்டதன் பேரில் முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.02.09 16:23:08 +0530